ஸ்ரீ ஹரி :

## பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

### தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 6 | ஜூன் 2001 | கானம் : 11

# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registrar of Newspapers for India Regd. No. TN/CPMG/156/2001
R. No. 62828/95 Licensed to Post without prepayment WPP No. 52

| வேணு : 6 | ஜூன் 2001 | கானம் : 11 |
|---|---|---|


ஸ்ரீ ஹரி:

## குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்

24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை-83.

## அறிவிப்பு

நமது மிஷன் சார்பில் ஜூலை '95 முதல் ''மதுரமுரளி'' நம்மை ஆன்மீக பாதையில் அழைத்துச் செல்கிறது. வரும் ஜூன் 2001ல் மதுரமுரளி ஆரம்பித்து ஆறு ஆண்டுகள் நிறைவடைகின்றது. சந்தாதாரர்கள் தங்களின் சந்தாவை புதுப்பித்துக்கொள்ள அழைக்கின்றோம்.

உள்நாடு : ஆண்டு சந்தா ரூ. 60/-
மூன்றாண்டு சந்தா ரூ. 180/-
ஆயுள் சந்தா ரூ. 750/-

வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ. 300/-

சந்தாவை **''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்''** என்ற பெயரில் மட்டுமே ரொக்கம் / M.O. / DD ஆக அனுப்பவும். தயவுசெய்து காசோலை அனுப்பவேண்டாம். மணிஆர்டர் மூலம் சந்தா அனுப்புபவர்கள் தயவுசெய்து தங்களது பெயர், Phone No., சந்தா எண், முழு முகவரி முதலியவற்றை space for communication என்ற இடத்தில் கட்டாயம் எழுதும்படி கேட்டுக்கொள்கிறோம். யாரிடமிருந்து சந்தா வந்துள்ளது என்று தெரிந்து கொண்டால் தான் மதுரமுரளியை அவர்களுக்கு அனுப்பமுடியும். அதுபோல், சந்தாதாரர்களின் முகவரியில் மாறுதல் இருக்குமானால் அதையும் உடனுக்குடன் மிஷனுக்கு எழுதி அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம்.


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. ✆ : 8522656 / 8524256 Editor : S. Sridhar

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 6 ஜூன் 2001 கானம் : 11

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 67 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 4 |
| 4. | வேதகதைகள் | 7 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 38 | 11 |
| 6. | ஸனாதன புதிர் - பகுதி - 2 | 15 |
| 7. | ப்ருந்தாவனமும், நந்தகுமாரனும் - 2 | 17 |
| 8. | வாரமும் குணமும் | 21 |
| 9. | பெரியாரைப் பிழையாமை | 23 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 70 | 27 |
| 11. | மஹாபாரத கதைகள் - நளோபாக்யானம் - தொடர்ச்சி | 31 |


முன் அட்டைப்படம் : ஸ்ரீ ப்ருந்தாவனத்தில், கிருஷ்ணன் குழலூதிய மரத்தினடியில் (வம்ஶீவட்) ஸ்ரீ ஸ்வாமிகளும், பக்தர்களும்.

ஶ்ரீ ஹரி:

# ஶ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் - பூபாளம் தாளம் - ஆதி

*பல்லவி*

***ப்ராத: ஸ்மராமி பாகவதான் (ப்ராத:)***

*அனுபல்லவி*

***ஹரிகுணகீர்த்தன ரமமாணான்***
***ஹரிபதஸேவன ஆனந்தான் (ப்ராத:)***

*சரணங்கள்*

***கணபதி ஸ்கந்த ஶம்பு கௌரீ-***
***ஆதித்யேந்த்ர ப்ரஜாபத்யாதீன்***
***அர்ஜுன குந்தீ லக்ஷ்மண ஹனுமந்த***
***நந்த யஶோதா பலபத்ராதீன் (ப்ராத:)***

***க்ஷீராப்தி ஶ்ரீவைகுண்ட ஶேஷகிரி***
***கோகுல ப்ருந்தாவன மதுராதீன்***
***த்வாரகா பூரி ஶ்ரீரங்க பத்ரி-***
***பாகீரதீ யமுனா ஸமுத்ரராஜாதீன் (ப்ராத:)***

***பகவத்பாத யதிராஜ பூர்ணப்ரஜ்ஞ***
***கௌராங்க நிம்பார்க்க ஶ்ரீவல்லபாதீன்***
***ஹரிவம்ஶ ஞானேஶ்வர ராமானந்த***
***முரளீதர ப்ரியான் அன்யான் ஸாதூன் (ப்ராத:)***

---

*நாமாவளி*

***பக்தப்ரிய க்ருஷ்ண மாம் பாஹி***
***பாகவதஸங்கம் மம தேஹி***

---

***ஸகல ஸாது மண்டலி கீ ஜெய்***

**67**

நம்முடைய ஸ்வாமிகள் சென்னைக்கு வந்த ஸமயத்தில் பம்மலில் அவருடைய தாய்வழி சித்தி ஸ்ரீமதி சரோஜா அண்ணாதுரை அவர்கள் க்ருஹத்தில் தங்கியிருந்தார்கள். திருநீர்மலை என்ற திவ்யதேசத்திற்கு ஸமீபத்தில் உள்ளது பம்மல் என்னும் பேட்டை. சி.வி. அண்ணாதுரை சரோஜா தம்பதிகள் தற்பொழுது அவர்களுடைய அந்த க்ருஹத்தை உயர்ந்த உதார சிந்தனையுடன் ஸத்ஸங்கத்திற்காக அர்ப்பணித்துவிட்டார்கள். தற்பொழுது அந்த க்ருஹம் மதுரமுரளிபவனம் என்று பெயரிடப் பட்டுள்ளது.

அக்ஷயத்ருதியை முதல் அவ்விடத்தில் தினமும் ஸத்ஸங்கம் நடைபெற்று வருகின்றது. அங்குள்ள ராதாக்ருஷ்ணருக்கு தினமும் ப்ரபோதனம், டோலோத்ஸவம், பூஜை எல்லாம் நடந்து வருகின்றது.

நம்முடைய ஸங்கத்தைச் சேர்ந்த பம்மல் பாலாஜி சர்மா, தான் பார்த்து வந்த உத்யோகத்தையும் உதறித்தள்ளிவிட்டு, பாகவத தர்மத்தை அனுஷ்டித்து, இந்த பவனத்திற்கு பொறுப்பேற்று நடத்தி வருகின்றார்கள். தினமும் இங்கு 'ஹரே ராம' மஹா நாமகீர்த்தனம் செய்யப்பட்டு வருகின்றது. அவ்வப்பொழுது ஸாதுக்களைக்கொண்டு திவ்யநாம ஸங்கீர்த்தனம், கதா ப்ரவசனம் போன்றவைகளும் நடைபெற உள்ளன. அனைவரும் அங்கு நடக்கும் ஸத்ஸங்கத்திலும் கலந்து கொள்ளலாம்.

இந்த மதுரமுரளிபவனம், No.5, 6-வது குறுக்குத்தெரு, எல்.ஐ.சி. காலனி, பம்மல் என்ற விலாசத்தில் உள்ளது.

**– ஜயந்தி ஜானகிராமன்**

(தொடரும்)

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : த்யானம் எப்படிச் செய்யவேண்டும் என்று புத்தகத்தைப் படித்தும் தெரிந்து கொள்ளலாம். ஜபங்களுக்கான அநேக மந்திரங்களும் பல புத்தகங்களில் காணப்படுகின்றன. வேதாந்த விசாரம் எப்படிச் செய்யவேண்டும் என்பதையும், யோகம் பயில்வது பற்றியும் பல நூல்கள் விரிவாகவே எடுத்துரைக்கின்றன. இப்படி இருக்கையில், ஒரு குருவின் துணைகொண்டுதான் இவைகளைச் செய்யவேண்டும் என்ற அவசியம் என்ன?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : நீங்கள் சொல்வது உண்மைதான். இன்று அநேக விஷயங்கள் பல நூல்களில் விரிவாக கூறப்பட்டுள்ளன. ஸாதிக்க வேண்டும் என்று, யாருக்கு எண்ணம் இருக்கின்றதோ, அவர்கள், இதில் ஏதோ ஒரு வழியை மேற்கொண்டு ஸாதனைகள் செய்யலாம். நாமும் செய்யலாம். இவற்றின் பயனாக இவர்களுக்கு பல அதிசயிக்கத்தக்க ஸித்திகள் எல்லாம் கைகூடலாம். இவர்கள் பராக்ரமசாலிகளாகவும் ஆகலாம். ஆனால், இவர்களுக்கு அஹங்கார, மமகாரங்கள் அடிபட்டுப்போகாது. மாயை இவர்களை விடாது. இவர்களுக்கு பெயர், புகழ் இவற்றில் நாட்டம் வந்துவிடும்.

ஆகவே, இவர்கள் தன்னையே கடவுளாகவும், கடவுளின் அவதாரமாகவும் கூறிக்கொள்ளலாம். இதையும் பலர் நம்பி ஏற்கக் கூடும். இவர்களிடம் பல ஆச்சரியத்தக்க ஸித்திகள் இருப்பதால் உலகம் இவர்களைக் கண்டு பிரமிக்கும். ஆனால், இவர்களுக்கு ஞானம் என்பது ஒருபோதும் வராது.

காவ்யகண்ட கணபதிமுனி என்று ஒருவர் இருந்தார். அவர் ஸம்ஸ்க்ருதம், கவித்வம், ஜோதிஷம், வேதம், வேதாந்தம், ஶாஸ்த்ரம் எல்லாவற்றிலும் வல்லவர். இதோடு மட்டுமில்லாமல் பல ஆச்சர்யமான ஸித்திகள் கைவரப்பெற்றவர். தன்னை மறந்து பல மணி நேரங்கள் ஜபம் செய்யக்கூடியவர். கடுமையான தவம்

இயற்றியவர். ஆச்சர்யமான க்ரந்தங்கள் எழுதியவர் - இவருக்கே பல சிஷ்யர்கள் உண்டு. ஆனால், இப்பேர்பட்டவரே ஞானத்தை அடைய வேண்டி, ஸ்ரீ ரமண பகவானிடம் தஞ்சம் அடைந்தார். காரணம், இவைகள் எல்லாம் ஞானத்தின் அடையாளங்கள் அல்ல என்பதை, அவர் நன்றாக உணர்ந்திருந்ததே ஆகும்.

ஆகவே, ஒரு குருவின் துணைகொண்டு ஸாதனைகள் செய்தால்தான் நமக்கு ஞானம் கைகூடும். கடுமையான தவம் என்று எடுத்துக்கொண்டால், நம்முடைய புராணங்களில் ஹிரண்யகசிபு, பத்மாசுரன் போன்ற எவ்வளவோ அரக்கர்கள்கூட தவம் இயற்றி உள்ளதைப் பார்க்கிறோம். ஆகவே, மனோபலம் இருக்குமானால், யார் வேண்டுமானாலும் தவம் செய்யலாம். ஆனால் ஞானம் என்பது குருவின் அனுக்ரஹத்தை துணைக்கொண்டுதான் அடையக்கூடிய ஒன்று.

***கேள்வி : ஶாஸ்த்ர ஞானம் உள்ளவர்களைதான் குருவாக அடைய வேண்டும் என்று ஶாஸ்த்ரங்கள் வெகுவாக பேசுகின்றனவே!***

பதில் : இதற்கு உண்மையான அர்த்தம் அவர் ஶாஸ்த்ரங்களை கசடறக் கற்றிருக்க வேண்டும் என்பது அன்று. ஶாஸ்த்ரத்தின் ஸாரமான ஞானத்தை அனுபவத்தில் கொண்டிருக்கவேண்டும் என்பதுதான் இதன் உண்மையான அர்த்தம்.

***கேள்வி : உலகத்தில் தானத்தினாலேயே ஸத்கதி கிடைக்கும் என்று ஶாஸ்த்ரங்கள் வெகுவாகக் கூறுகின்றன. ஆனால், என்னிடம் பணம் இல்லையே! நான் எப்படி தானம் செய்வது?***

பதில் : தானம் என்பது பணம் ஸம்பந்தப்பட்ட விஷயம் மட்டும் அன்று. ஞானதானம், விஷயதானம், வித்யாதானம், ஶ்ரமதானம் என்று தானங்கள் பலவகைப்படும். இவைகளில் ஏதேனும் ஒன்றை நாம் செய்யலாமே!

***கேள்வி : இறைவன் நம்முன் வந்து, உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டால், என்ன கேட்கலாம்?***

பதில் : வேண்டாமை என்ற வரமே, வேண்டுவதாக இருக்க வேண்டும்.

*கேள்வி : இறைவன் நினைத்தால் எந்த யோக்யதையும் இல்லாதவர்க்குக் கூட ஒரு தினத்திலேயே பூர்ணமாக இறையருள் கைகூடும் என்கிறார்களே! இது ஸாத்யம்தானா?*

பதில் : இது ஸாத்யம்தான். இதில் ஸந்தேகமென்ன! இறைவனுடைய ஸங்கல்பத்தினால் எப்பேர்ப்பட்டவரும் கூட ஒரு க்ஷணத்திற்குள் இறையருளை பெற்று உயர்ந்த ஞானியாக முடியும். பல பக்தர்களுடைய சரித்ரத்தில் இவ்விதம் நடந்துள்ளது.

*கேள்வி : உலகத்தில் ஜாதி, மதம் பார்க்காமல் எல்லோரிடமும் நாம ப்ரச்சாரம் செய்யவேண்டும் என்று ஆசைப்படுகின்றீர்கள். இதற்கு முன் இப்படி செய்த மஹாபுருஷர்கள் யார் யார்?*

பதில் : ராமானுஜர், கபீர்தாஸர், சைதன்ய மஹாப்ரபு போன்றவர்கள்தான் இத்தகைய ரீதியில் நாமப்ரச்சாரம் செய்துள்ளனர். ஸமீபகாலத்தில், இஸ்கான் (ISKCON) என்ற க்ருஷ்ணபக்தி இயக்கத்தை ஸ்தாபித்த ப்ரபுபாதாவின் நாமப்ரச்சாரத்தையும் அவச்யம் சொல்லித்தான் ஆகவேண்டும். சில மஹாத்மாக்கள், தான் கரையேற வழிதேடிக் கொண்டு அதோடு திருப்தி அடைந்து விடுகின்றார்கள். சிலர் தங்களுக்கென்று சில ஆயிரம் பேர்களைச் சேர்த்துக்கொண்டு, அத்துடன் திருப்தி அடைந்துவிடுகின்றார்கள். உலகம் முழுவதற்கும் இத்தகைய ஞான தானத்தை செய்ய, ஒரு சில மஹாத்மாக்களே வருகின்றனர்.

---

**ஸ்ரீ மஹாபெரியவாள் சொல்லி பம்மல் ஏகாம்ர சாஸ்திரிகள் கேட்டது**

- ஆமணக்கு இலையிலும், பனை ஓலையிலும் வைத்த புஷ்பங்களை எடுத்து இறைவனுக்கு பூஜை செய்தல் ஆகாது.
- குயவர்கள் எந்த இடத்தில் மண் பாண்டம் செய்கிறார்களோ அந்த இடம் ஸர்வ விதத்திலும் பரிசுத்தமானது. அந்த இடத்திற்கு எந்த சுத்தியும் செய்ய வேண்டிய அவசியமில்லை.

# வேதகதைகள்

### ம்ருகசீர்ஷ நக்ஷத்ரத்தின் தோற்றம்

முன்பு ப்ரஹ்மா தான் படைத்த பெண்ணை தனது மனைவியாக எண்ணினார். அந்த பெண் விஷயத்தில் மஹரிஷிகளுக்கு அபிப்ராய பேதம் இருந்தது. சில மஹரிஷிகள், ப்ரஜாபதியானவர், தான் படைத்த பெண்ணை மனைவியாக நினைக்கவில்லை. த்யுலோக தேவதையை த்யானம் செய்தார் என்றனர். சில மஹரிஷிகள் உஷத் கால தேவதையை மனைவியாக எண்ணினார் என்று கூறினர். பிறகு அந்த ப்ரஜாபதியானவர் ரிஷ்யம் என்ற ஒருவித மான் உருவம் எடுத்தார். அந்தப் பெண்ணும் ருதுவை அடைந்தாள். அப்படிப்பட்ட அவளை அவர் தன் மனைவியாக ஏற்றார்.

இதைக் குறித்து தேவர்கள் ஒருவருக்கொருவர், இந்தப் ப்ரஜாபதியானவர் தகாத கார்யம் செய்தார் என்று தீர்மானித்து எந்த புருஷன், இந்த ப்ரஜாபதிக்கு துன்பம் ஏற்படுத்துவான் என்று தேடினர். இவ்விதம் தேடியும் அந்த தேவர்களுக்குள், ப்ரஜாபதியை தண்டிக்கும் மனிதனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. உன்னால் ப்ரஜாபதியை தண்டிக்க முடியுமா என்று ஒவ்வொருவரையும் கேட்டு, எவருக்கும் ப்ரஜாபதியை தண்டிக்க சக்தியில்லை என்று தீர்மானித்தனர்.

உலகில் ப்ரஹ்ம்மாவினால் படைக்கப்பட்ட பெண்கள் யாவருமே ப்ரஹ்ம்மாவுக்கு பெண்ணாகத்தான் ஆகிறார்கள். இந்த கதையால் ப்ரஹ்ம்மாவாக இருந்தாலும் தப்பு செய்தால் அவருக்கு தண்டனை அளித்தே தீரவேண்டும். ஆதலால் யாருமே தப்பு செய்யக் கூடாது. தப்பு செய்தால் தண்டனை பெற்றே ஆக வேண்டும் என்ற உண்மை இக்கதையின் மூலம் நமக்குப் புலனாகிறது. இந்தக் கதை வேதத்தில் கூறப்படுகிறது. இவ்விதம் எந்த வரலாற்றையும், எந்த நோக்குடன் கூறப்பட்டுள்ளது என்ற நோக்குடன் பரிசீலனை செய்ய வேண்டுமே தவிர, ப்ரஜாபதியே தவறிழைத்தார் என்று விபரீதமான எண்ணம் கொண்டு விதண்டாவாதம் செய்வது வீணாகும்.

ப்ரஹ்மாவை தண்டிக்கக்கூடிய புருஷன் கிடைக்காததால், எந்த தேவர்களில் மிகவும் கோரமான உடல்கள் உண்டோ, அந்த தேவர்களின் கோரமான உடல்களை ஒன்றாகச் சேர்த்தார்கள். அப்படிச் சேர்க்கப்பட்டவன் ஒரு தேவனானான். அவனுக்குத்தான் பூதவான் என்று பெயர். பூதவான் என்றால் பூதங்களுக்கு தலைவன் என்று கருத்து. இவ்விதம் சிவனுக்கு பூதபதி என்று பெயர் ஏற்பட்டது. இந்த வரலாற்றை எவன் தெரிந்து கொள்கிறானோ அவன் நிறைந்த செல்வத்தை அடைகிறான்.

பிறகு தேவர்கள் ருத்ரனைப் பார்த்து, ''ஓ ருத்ரனே, இந்த ப்ரஜாபதியானவர் செய்யக்கூடாததை செய்தார். ஆதலால் இவரை பாணத்தால் அடிப்பாயாக'' என்றனர். ருத்ரனும் அதை அங்கீகரித்து பசுக்களுக்கு தலைவனாக என்னை ஆக்கினால் நீங்கள் கூறியதை செய்கிறேன் என்றார். தேவர்களும் இதை ஒப்புக் கொண்டனர். அன்று முதல் ருத்ரன் பசுபதி எனப்படுகிறார். இந்த வரலாற்றை அறிந்தவனுக்கு நிறைந்த பசுக்கள் கிடைக்கும்.

அந்த ருத்ரன் வந்து பாணத்துடன் கூடிய வில்லை வளைத்து ப்ரஜாபதியை அடித்தார். அடிபட்ட ப்ரஜாபதியானவர், முகத்தை உயர்த்தியவராக விண்ணை நோக்கித் தாவினார். இவ்விதம் ஆகாயத்தை நோக்கி, மான் உருவத்துடன் ஆகாயத்தில் பாய்ந்த ப்ரஜாபதியை, மான் நக்ஷத்ரம் என்று கூறுகிறார்கள். அந்த மானைத்தான் ரோகிணி, திருவாதிரை என்ற நக்ஷத்ரங்களின் நடுவில் உள்ள ம்ருகசீர்ஷம் என்று கூறுகிறார்கள். சிவனால் அடிக்கப்பட்ட ப்ரஜாபதி நக்ஷத்ரமாக மாறினார் என்பது கருத்து.

வேதத்தில் ஒரு இடத்தில் (ஸுக்ருதாம்வா ஏதாநி ஜோதீம்ஷி யந்நக்ஷத்ராணி) என்று உள்ளது. புண்யம் செய்தவர்கள்தான் நக்ஷத்ரங்களாக விண்ணில் விளங்குகின்றனர் என்று இதற்கு பொருள். ப்ரஜாபதி தப்பு செய்தவராக இருந்தால் நக்ஷத்ரமாக மாறியிருக்க முடியாது. இந்த உயர்ந்த காரணத்தினாலேயே, ப்ரஜாபதி தப்பு செய்தார் என்பது இந்த கதையின் நோக்கமில்லை என்று நமக்கு நன்கு தெளிவாகப் புரிகிறது. இவ்விதம் வேட உருவம் எடுத்து சிவன் மானை அடித்ததால், இன்றும் அதே உருவம்

பூண்டு வேடன் மானை அடிக்கிறான். அவனுக்கு ம்ருகவ்யாதன் என்று பெயர்.

அந்தப் பெண்ணும் சுய உருவம் எடுத்து ஆகாயத்தில் ரோகிணி நக்ஷத்ரம் என்ற பெயருடன் விளங்குகிறது. சிவனால் போடப்பட்ட பாணமானது அனீகம், சல்ய:, தேஜனம் என்று மூன்று அவயவம் உள்ளதாக இன்றும் பாணமாக விளங்குகிறது.

சிவன் அடித்தபொழுது, அந்த ப்ரஜாபதியின் சக்தியானது பூமியில் விழுந்தது. பள்ளத்தில் விழுந்ததால், ப்ரவாகமாக ஓடியது, ஒரு பெரிய ஓடையாக ஆயிற்று. அந்த சக்தியானது தொடக்கூடாததாக ஆகவில்லை. (மாதுஷத்) தொடக்கூடாததாக இருக்க வேண்டாம் என்று இங்கு வேதவாக்யம் உள்ளது. அந்த ஓடையிலிருந்து மனிதர்கள் தோன்றினர். மாதுஷத் என்ற பதத்தில் உள்ள ''து'' என்ற எழுத்தானது ''நு'' என்ற எழுத்தாக மாறிற்று. அதனால்தான் மாநுஷர்கள் என்று பெயர் ஏற்பட்டது. மேலும் உயர்ந்தவர்கள் பெயரை நேரடியாக கூறக்கூடாது என்பதாலும், மாதுஷத் என்று அழைக்கவேண்டிய பெயரை மானுஷர்கள் என்று அழைக்கிறோம்.

இதனால்தான், உலகில் தாய் தந்தையர்கள் வைத்த பெயரைக் கூறி யாரை அழைத்தாலும், அவர்கள் மகிழ்ச்சி அடைவதில்லை. உபாத்யாயர், ஆசார்யன், ஸ்வாமி என்று அழைத்தால்தான் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

இவ்விதம் ப்ரஜாபதியின் எந்த சக்தியானது, தேவர்களால் தோஷமற்றதாக செய்யப்பட்டதோ, அந்த சக்தியை அக்னியால் சூழச் செய்தனர். அந்த ஓடையில் உள்ள ஜலமானது, ப்ரவாஹ ரூபேண வெளியில் வராமலிருக்க இவ்விதம் செய்தனர். பிறகு மருத்துக்கள் அந்த ஜலத்தை உலரச் செய்து, வற்றச் செய்ய முயற்சித்தனர். அப்பொழுதும் அந்த ஜலம் வற்றவில்லை. அந்த அக்னிதான் இன்றும் நம் வயிற்றில் வைஶ்வாநரம் என்ற பெயருடன் எல்லா ப்ராணிகளின் உதரத்திலும் இருந்துகொண்டு, உணவை நன்கு பக்குவமாகச் செய்கிறது. இதைத்தான் பகவான் கீதையிலும்,

*அஹம் வைஶ்வாநரோ பூத்வா ப்ராணிநாம் தேஹமாஶ்ரித: ।*
*ப்ராணாபானஸமாயுக்த: பசாம்யன்னம் சதுர்விதம் ॥*

என்று கூறுகிறார். பிறகு வைஶ்வாநரன் என்ற அக்னியானவர், ஓடையில் உள்ள அந்த ஜலத்தை, பனிக்கட்டி போல் பிண்டமாக ஆக்கினார். அந்த பிண்டம்தான் மூன்றாக ஆயிற்று. முதல்பாகம் ஸூர்யனாக ஆயிற்று. ப்ருகுவாக இரண்டாவது பிண்டம் ஆயிற்று. அந்த ப்ருகுவை அடக்கி, வருணன் தன் பிள்ளையாக ஆக்கினான். அவர்தான் 'ப்ருகுர்வை வாருணி:' என்று கூறப்படுகிறார். மூன்றாவது பாகமானது அதிதியின் பிள்ளையாக ஆனார்கள். அவர்கள் தேவர்கள் எனப்படுகிறார்கள். அந்த பிண்டங்களிலிருந்து சிதறிய ஒரு பாகங்கள் தனல்களாக மாறின. அவைகள் அங்கிரஸ் என்ற பெயருள்ள ரிஷிகளாக ஆனார்கள்.

எந்த ஒளி அடங்கவில்லையோ அவைகள் ப்ருஹஸ்பதியாக மாறின. தனல்கள் அடங்கிய பிறகு கருப்பான கட்டைகள் கருப்பு நிறமுள்ள பசுக்களாக மாறின. அக்னி பொசுங்கியதால் சிவப்பான பூமியிலிருந்து சிவப்பான பசுக்கள் உண்டாயின. அந்த அக்னியினிடத்தில் தங்கிய சாம்பல், பலவித காட்டு மிருகங்களாக ஆயின. இவ்விதம் தோன்றிய எல்லா பசுக்களையும் ருத்ரன் என்னுடையது என்று கூறினார். இவ்விதம் பசுக்களில் ஆசை வைத்த சிவனை (ஆதே பிதர் மருதாம்) என்ற சில ***ரிக்குகளால்*** துதித்தனர். இதனால் சிவன் மகிழ்ந்து பசுக்களிடத்தில் ஆசையை ஒழித்தார். சிவனிடமிருந்த பசுக்களைப் பெற்று தேவர்களும் மகிழ்ந்தனர். இந்த ரிக்கானது, ஆக்ண மாருத ஶஸ்த்ரம் என்று யாகத்தில் ஒரு ஶஸ்த்ரத்தில் வருகிறது.

இந்த கதையால் தேவனாக இருந்தாலும், குற்றம் செய்தவனுக்கு தண்டனை நிச்சயம் உண்டு. நம்மால் ஸம்பாதிக்கப்பட்டபோதிலும், எந்த பொருளிலும் நாம் ஆசை வைக்கக் கூடாது என்ற பலவித உண்மைகள் நமக்கு நன்கு புலப்படுகின்றன. மான்தான் ம்ருகசீர்ஷம் என்ற நக்ஷத்ரமாக ஆயிற்று என்பது, சிவராத்திரியின் பெருமையைக் கூறும் ஒரு கதையிலும் உள்ளது. அந்த கதைக்கு, இங்கு வேதத்தில் கூறப்பட்டுள்ள கதைதான் அடிப்படையாகும்.

# எந்தரோ மஹானுபாவுலு - 38

சசீமாதாவின் கர்ப்பத்தில் நிமாயி இருந்தபொழுதே அவளுக்கு ஒரு அவதார புருஷன் புத்ரனாகப் பிறப்பான் என்று ஆசீர்வாதம் செய்த அத்வைதாசார்யரைப் பற்றி நாம் ஏற்கனவே அறிவோம். அவர் நவத்வீபத்திற்கு அருகில் உள்ள சாந்திபூர் என்ற இடத்தில் வசித்து வந்தார். நவத்வீபத்தில் க்ருஷ்ணசந்திரனாக மஹாப்ரபு பக்தி வெள்ளத்தில் ஜனங்களை மூழ்கடித்து ஆனந்தப்படுத்திக்கொண்டு இருப்பதைக் கேள்வியுற்ற அவருக்குத் தானும் அங்கு சென்று ப்ரபுவின் லீலைகளை அனுபவிக்கவேண்டும் என்ற ஆவல் உண்டாகியது. உத்தமமான ப்ரேமையில் எப்பொழுதும் சிறிது அபிமானமும் தலை தூக்கி நிற்கும். அதனால், ''ப்ரபுதான் எனது இஷ்ட தெய்வம் என்றிருக்குமானால், அவரே என்னை அழைக்கட்டுமே. நானாக ஏன் செல்ல வேண்டும்'' என்று நினைத்தார்.

மஹாப்ரபுவும் ஒருநாள் நாமஸங்கீர்த்தனத்தின் நடுவில் **பா**வ ஆவேசம் வந்து, ''நாடா எங்கே! என்னை இங்கு வரச் சொல்லிவிட்டு சாந்திபூரிலேயே ஒளிந்துகொண்டு இருந்தால் என்ன அர்த்தம்?'' என்று கர்ஜித்தார். பக்தர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஸ்ரீவாஸ்பண்டிதர் தீனமாக, ''ப்ரபு! நாடா என்பவர் யார்'' என்று கேட்டார். ப்ரபு, ''அத்வைதாச்சார்யர் தான் நாடா என்றழைக்கப்படுபவர். அவரது அழைப்பின் பேரில்தான் நானே அவதரித்திருக்கிறேன்'' என்றுரைத்தார். ஸ்ரீவாஸ்பண்டிதரின் இளைய ஸகோதரரான ரமாயி பண்டிதரை சாந்திபூருக்குச் சென்று அத்வைதாச்சார்யரை அழைத்து வர அனுப்பினார்கள். அத்வைதாசார்யருக்கு, ரமாயி பண்டிதரைக் கண்டதும் மிக்க ஆனந்தம் உண்டாயிற்று. அவரை அன்புடன் அணைத்துக்கொண்டார். ப்ரபுவுக்கு, தனது ஸ்மரணம் உண்டாகி தன்னை அழைத்துவர ரமாயி பண்டிதரை அனுப்பி உள்ளார் என்று அறிந்துகொண்டார் அத்வைதாசார்யர். ஆயினும் அவர், ''நாம ஸங்கீர்த்தனத்தை ப்ரசாரம் செய்ய பகவான் அவதரிக்கவேண்டும் என நான் ப்ரார்த்தித்துக்கொண்டேன். ஆனால், என்னுடைய ஆராதனை தெய்வம்தான் ப்ரபு என்பதற்கு என்ன ப்ரமாணம்?'' என்று ரமாயி பண்டிதரிடம் கேட்டார். உடனே ரமாயி பண்டிதர்,

''எனக்கு ப்ரமாணம், ஹேது என்பது பற்றி எல்லாம் என்ன தெரியும்? நான் உங்களைப் போல பண்டிதனில்லை. ஆனால் ஒன்று மட்டும் தெரியும். மஹாப்ரபு அடிக்கடி **பா**வத்தில், ''லோக உத்தாரண சிந்தை, அத்வைதாச்சார்யருக்குத்தான் அதிகம். அவரது கட்டளைக்கு கீழ்ப்பட்டுதான் க்ருஷ்ண ஸங்கீர்த்தனம் மூலம் உலகத்தை உத்தாரணம் செய்ய, நான் பூமியில் அவதரித்து உள்ளேன் என்று கூறுவார்'' என்று சொன்னார்.



இதைக் கேட்டு ஆசார்யருக்கு மனதுக்குள் ஆனந்தம் ஏற்பட்டது. தனது பூஜை சாமக்ரியைகளைச் எடுத்துக்கொண்டு மனைவி, குழந்தைகளுடன், நவத்வீபத்தை நோக்கி, ரமாயி பண்டிதருடன் கிளம்பிவிட்டார். அங்கு சென்றதும் ரமாயி பண்டிதரிடம், ''நான் நந்தனாசார்யார் வீட்டிலே தங்கிக் கொள்கிறேன். ப்ரபு என் ஸம்பந்தமாக விசாரித்தால், நான் வரவில்லை என்று சொல்லிவிடு'' என்று கூறிவிட்டு நந்தனாசார்யர் வீட்டில் தங்கிவிட்டார். ''ப்ரபுவுக்கு என்னிடம் யதார்த்தமான ப்ரீதி இருந்தால், அவரே தனது சரணத்தை என் சிரஸ்ஸில் வைத்து க்ருபை செய்யட்டும். அப்போதுதான் அவர் எனது ப்ரார்த்தனைக்கு செவி

சாய்த்து, உலக உத்தாரணத்துக்காக அவதரித்தார் என நான் ஏற்றுக் கொள்வேன்'' என்று நினைத்துக்கொண்டார்.

ரமாயி பண்டிதர் தன் வீட்டிற்குச் சென்றுவிட்டார். மாலையில் வழக்கம் போல் ஸ்ரீவாஸ் பண்டிதர் வீட்டில் பக்தர்கள் கூடினர். ப்ரபுவும் சிறிது நேரத்தில் வந்து சேர்ந்தார். வீட்டிற்குள் நுழையும் பொழுதே **பா**வ ஆவேசம்தான். நேரே பகவானின் ஆசனத்தில் வந்து அமர்ந்துகொண்டு, ''நாடா, சாந்திபூரிலிருந்து என்னமோ வந்துவிட்டார். இருந்தும் என்னை பரீக்ஷை செய்ய எண்ணி நந்தனாசார்யர் வீட்டில் வந்து ஒளிந்து கொண்டிருக்கிறாரே! அவரே என்னை அழைத்துவிட்டு, இப்பொழுது அவரே பரீக்ஷையும் செய்கிறார்'' என்றார். ப்ரபுவின் வசனங்களை கேட்ட பக்தர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அப்பொழுது அங்கே ரமாயி பண்டிதர் வந்து சேர்ந்து, நடந்த விவரங்களை கூறிவிட்டு நேரே அத்வைதாச்சார்யரிடமும் சென்று ப்ரபு கூறியது பற்றியும் தெரிவித்தார்.

ஆசார்யர் இப்பொழுது பெரிய ஆச்சர்யத்தில் ஆழ்ந்தார். பக்திப் பெருக்கில் நேரே ஸ்ரீவாஸ்பண்டிதரின் வீட்டுக்கு விழுந்தடித்துக்கொண்டு ஓடினார். அந்த க்ருஹமே அவருக்கு அலௌகிகமாக தோன்றியது. கோடி ஸூர்ய ப்ரகாசத்துடன் தேஜோமயமாக அமர்ந்திருந்த மஹாப்ரபு, அவரது கண்களுக்கு ஸ்பஷ்டமாக புலப்படவில்லை. ப்ரபுவின் தேஜஸை தாங்கிக்கொள்ள முடியாமல் ஆசார்யர் மூர்ச்சையாகி விழுந்தார். பக்தர்கள் அவரை ப்ரபுவின் அருகில் தூக்கிச் சென்று கிடத்தினார்கள். ப்ரபு ''ஆசார்யரே எழுந்திரும்! உங்கள் மன அபிலாஷை பூர்ணமாகிவிட்டதே! இப்பொழுது எழுந்திருந்து விதிவத்தாக என்னை பூஜியுங்கள்'' என்றார். ப்ரபுவின் ப்ரேம மயமான ஆணையைக் கேட்டதும், எழுபது வயது நிரம்பிய, தலை பஞ்சாய் நரைத்த அத்வைதாசார்யர், சிறுபையனைப் போல் குதூகலத்துடன் எழுந்து இருபத்து மூன்று வயது நிரம்பிய மஹாப்ரபுவை பூஜை செய்யலானார். இதுதான் பகவானின் விபூதி என்பது. இறைவனின் விபூதியின் முன் அனைவரும் சிறியவர்கள்தான். அவதார புருஷரின் ப்ரபாவத்திற்கு முன் ஒருவர் ஜாதி, குலம், ரூபம், வயது இவற்றில் உயர்வாக

இருந்தாலும் பணிந்து வணங்க வேண்டியதுதான் நியதி.

முறைப்படி அத்வைதாசாரியர் மஹாப்ரபுவிற்கு பூஜைகள் செய்து

*“நமோ ப்ரம்ஹண்ய தேவாய கோப்ராம்ஹணஹிதாய ச*
*ஜகத்திதாய க்ருஷ்ணாய கோவிந்தாய நமோ நம: ”*

என்று ஸ்துதி செய்துகொண்டே இருந்தார். பிறகு மறுபடி மூர்ச்சையானார். பிறகு ஆசார்யரின் பத்னி சீதாதேவியும் மஹாப்ரபுவுக்கு பூஜை செய்தாள். ப்ரபு இருவரது தலையிலும் தனது ஸ்ரீசரணத்தை வைத்து ஆசீர்வதித்தார். அவரது பாத ஸ்பர்சம் ஏற்பட்டவுடன் ஆசார்யரும், அவரது பத்னியும் ஆனந்த வெள்ளத்தில் திளைத்து அழ ஆரம்பித்தனர். அவர்களை ஆச்வாசப்படுத்தி, ‘‘ஆசார்யரே எழுந்திரும். இனி தாமதம் வேண்டாம். க்ருஷ்ண ஸங்கீர்த்தனம் செய்து என்னை ஸுகப்படுத்துங்கள்’’ என்று ப்ரபு ஆணையிட்டார்.

உடனேயே ஆசார்யர் இரு கைகளையும் உயரே தூக்கிக் கொண்டு நாமஸங்கீர்த்தனம் செய்ய ஆரம்பித்தார். மற்ற பக்தர்களும், வாத்யங்களுடன் இணைந்துகொண்டனர். அன்று அனைத்து பக்தர்களும் இன்று போல் என்றுமே நாமஸங்கீர்த்தன ஆனந்தம் ஏற்பட்டதில்லை என கூறி மகிழ்ந்தனர். நிமாயி, நிதாயி, அத்வைதாசார்யர் என்ற மூன்று ப்ரேமிக பக்தர்கள் இணைந்தால் அங்கு இப்பேர்ப்பட்ட அலௌகிக ஆனந்தம் ஏற்படுவதில் என்ன ஆச்சர்யம்!

(தொடரும்)

**-ஜயந்தி ஜானகிராமன்**

---

*எப்பொழுதாவது சில நேரங்களில் பகவந்நாமத்தை கீர்த்தனை செய்பவர்கள் பாகவதர்கள். எப்பொழுதும் பகவன் நாமத்தை கீர்த்தனை செய்து வருபவர்கள் பாகவததரர்கள். தன் முயற்சி இன்றி தன்னிச்சையாகவே பகவந்நாமத்தை கீர்த்தனை செய்து வருபவர்கள் பாகவதோத்தமர்கள்.* **- ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபு**

# ஸனாதன புதிர் - 2

**''ஆத்ரேயன்''**

1) ப்ராக்ஜ்யோதிஷபுரம் அரசர் மஹாபாரதப் போரில் தனது யானை மூலம் மிகுந்த சேதத்தை விளைவித்தார். அந்த அரசர் பெயர் என்ன? அவரது யானை பெயர் என்ன? அவர் யாரால் கொல்லப்பட்டார்?
2) திரௌபதி சுயம்வரத்தில் உபயோகப்படுத்தப்பட்ட வில்லின் பெயர் என்ன?
3) அபிமன்யுவின் தாய், தந்தையர் பெயர் என்ன? மனைவி, பிள்ளையின் பெயர் என்ன?
4) அக்னி, அர்ஜுனனுக்குக் கொடுத்த உயர்ந்த வில்லின் பெயர் என்ன?
5) க்ருஷ்ணத்வைபாயனர் என்பவர் யார்? அவரது தந்தையின் பெயர் என்ன? பிள்ளையின் பெயர் என்ன?
6) யாஜ்ஞஸேனி என்று மஹாபாரதத்தில் யாருக்குப் பெயர்?
7) 18 அக்ஷௌஹிணி அடங்கிய மஹாபாரதப் போரில் கடைசியாக எஞ்சிய / பிழைத்த பத்து பேர்கள் யார் யார்?
8) துச்சலையின் மூத்த அண்ணன் பெயர் என்ன? துச்சலையின் கணவர் பெயர் என்ன?
9) அர்ஜுனனின் பத்து பெயர்கள் என்ன?
10) தர்மதேவதை யாருடைய சாபத்தினால் விதுரராகப் பிறந்தார்?
11) இந்திரஜித் என்று அழைக்கப்படும் ராவணனின் பிள்ளையின் இயற்பெயர் என்ன?
12) லக்ஷ்மணன் யுத்தத்தில் மயங்கி இருந்த நிலையில் இருந்த பொழுது ஹனுமாரை சஞ்சீவி பர்வதத்தில் இருந்து பச்சிலைகளை எடுத்துவரச் சொன்ன மருத்துவர் பெயர் என்ன?
13) ஹனுமானின் தாயார் பெயர் என்ன? அவர் சாபத்தால் அனுமனின் தாயாக பூமியில் பிறக்கும் முன் தேவலோகத்தில் இருந்தபொழுது அவருக்கு என்ன பெயர்?

ஸனாதன புதிர் பகுதி - 2க்கான பதில்களை
ஜூன் 25-ந் தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

## ஸனாதன புதிர்-1க்கான விடைகள்

1. மைத்ரேயீ, காத்யாயனீ
2. கார்கி
3. பத்மபாதர், சுரேஶ்வரர், தோடகர், ஹஸ்தாமலகர்
4. ரத்னாகர் என்னும் ருக்ஷர்
5. ஸமர்த்த ராம்தாஸ்
6. பாஸ்கர சேதுபதி இராமநாதபுர ராஜா
7. ஹஸ்தாமலகர்
8. கௌடபாதீய காரிகா
9. தபதீ, ஸாவர்ணீ மனு, ஶனைச்சரன்
10. மைத்ரேயர்
11. ததீசி
12. ஸமர்த்த ராமதாஸ்
13. தாமரையிலை
14. சகுனி
15. க்ருதவர்மா, க்ருபாசார்யர்
16. இராவான்
17. விஶ்வகர்மா
18. கோபக்பட்னம் (கோமாந்த்)

---

ஸனாதன புதிர் - பகுதி - 1க்கான
வினாக்களுக்கு சரியான பதில்களை அனுப்பி
பரிசு பெற்றவர்கள் விவரம்.

---

**முதல் பரிசு ரூ.** 250/-

பரிசு பெற்றவர் : **Miss. R. SUBADRA,** "Sri Brindavan"
Sannadhi Street, Paranur Village, Mogaiyur Post,
Pin - 605 755. Via. Villupuram R.M.S.

**இரண்டாம் பரிசு ரூ.** 150/-

பரிசு பெற்றவர் : **திரு. வ. திருநாராயணன்**
F1, சந்தோஷ் அபார்ட்மெண்ட், 61, **U.R.** நகர் விரிவு,
அண்ணாநகர் மேற்கு, சென்னை - 600 101.

**மூன்றாம் பரிசு ரூ.** 100/-

(இருவருக்கு தலா ரூ. 50/- வீதம் பரிசளிக்கப்படுகிறது)

பரிசு பெற்றவர்கள் : 1. **Miss. N. NALINA,** N0.8, Selvaraj Street,
Ganapathipuram, Chrompet, Chennai - 600 044.

2. **திரு. ஜயேந்த்ரன்**
12, ஆண்டார் நைனியப்பன் தெரு,
மயூரபுரி, சென்னை.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 2

பீஹார் மாநிலத்தைச் சேர்ந்த மிதிலாபுரி என்ற ஊரில் ஸ்ரீஹரிகிங்கரர் என்ற யோகீஸ்வரர் வாழ்ந்து வந்தார். இவருக்கு ஸ்ரீமத் பாகவதத்தில் அளவில்லாத ப்ரியமும் நம்பிக்கையும் இருந்தது. திடகாத்திரமான ஆரோக்கியத்துடன் இருக்கும்பொழுது ஒரு நாள் அவர் தனது சிஷ்யர்களை அழைத்து கார்த்திகை மாதத்தில் ஒரு நிச்சயித்த நாளில் ஸ்ரீமத் பாகவதம் பாராயணம் செய்து கொண்டே கங்கைக் கரையில் செமாரியா கட்டத்தில், தனது சரீரத்தை விட்டுவிடப் போவதாக அறிவித்தார். அந்த தினத்தில், அவர் தனது சீடர்களுடன் கங்கைக் கரையில் செமாரியா கட்டத்தில் அமர்ந்து கொண்டு பாகவதம் பாராயணம் செய்ய ஆரம்பித்தார். ராஸபஞ்சாத்யாயீ பாராயணம் ஆரம்பித்து, ராஸ லீலை கட்டம் படிக்கும்பொழுது **பா**வ ஆவேசம் ஏற்பட்டு, ''ஹா க்ருஷ்ணா'' என கூவிக்கொண்டே தனது ப்ராக்ருத சரீரத்திலிருந்து விடுபட்டு வானுலக ப்ருந்தாவனத்தில் தனது சித்த தேஹத்துடன் ராஸலீலையில் கலந்துவிட்டார்.

ஸ்ரீஹரிகிங்கரருக்கு, ஸ்ரீயமுனாதாஸ், ஸ்ரீ அவததாஸ் என்று இரு முக்கிய சிஷ்யர்கள் இருந்தனர். தனது சரீரத்தை விட்டுப் பிரியுமுன் அவர் யமுனாதாஸையும், அவததாஸையும் அழைத்தார். தனது காலத்திற்குப் பிறகு யமுனாதாஸ் தேசத்தின் பல பாகங்களுக்குச் சென்று வைஷ்ணவத்தை ப்ரசாரம் செய்ய வேண்டும் என்றும், அவததாஸ் ப்ருந்தாவனத்துக்குச் சென்று பஜனை செய்து கொண்டு காலத்தைக் கழிக்கவேண்டும் என்றும் கூறினார்.

அவததாஸ் 1826-ஆம் ஆண்டு பீஹாரைச் சேர்ந்த பால்புரா மாவட்டத்திலுள்ள மந்தார மதுஸூதனா என்ற ஊரில் ஒரு ப்ராஹ்மண குலத்தில் பிறந்தார். ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு, கயா யாத்திரைக்குச் செல்லும்பொழுது, இந்த கிராமத்து வழியாகச் சென்று தனது திவ்ய சரணங்களால் இந்த ஊரின் பூமியைப் புனிதப்படுத்திச் சென்றார். அவததாஸ் இளம் வயதிலேயே உலகைத் துறந்து ஸ்ரீஹரிகிங்கரரிடம் தீக்ஷை பெற்றார். அதற்குப் பிறகு

ஸ்ரீஹரிகிங்கரரின் ஆஶ்ரமத்திலேயே வசித்து வந்தார். ஸ்ரீ ஹரிகிங்கரரின் மறைவிற்குப் பிறகு அவர் ப்ருந்தாவனம் சென்று தோபிகலி என்ற இடத்தில், ஒரு வீட்டில் வசித்தார். பிறகு அதுவே அவரது ஆஶ்ரமமாகிவிட்டது. ஸ்ரீஹரிகிங்கரர் யோகீஶ்வரர் மட்டுமில்லாமல் ஒரு பண்டிதராகவும் இருந்தார். அவததாஸ், அவரிடத்தில் ஸகல ஶாஸ்த்ரத்தையும் கற்று பண்டிதராகத் திகழ்ந்தார். ஸ்ரீமத் பாகவதத்தை நன்கு கற்றறிந்து, முழு க்ரந்தத்தையும் மனப்பாடம் செய்தார்.

தனது வாழ்நாள் முழுவதும் அவர் தனது க்ருஹத்தை விட்டு வருஷத்தில் இரு நாட்களில்தான் வெளியில் வருவார். ஸ்ரீமத்வாச்சாரியரின் ஜயந்தி அன்றும், தனது குருதேவரின் ஜயந்தி அன்றும் மட்டும் அவர் நகர ஸங்கீர்த்தனம் செய்துகொண்டு வீதியில் செல்வார். மற்ற நாட்களில் அவர் தனது வீட்டிலேயே எந்நேரமும் பஜனை செய்துகொண்டு இருப்பார். ஒரு நாளில் இரண்டு அல்லது மூன்று மணி நேரம்தான் உறங்குவார். அவரது பஜனை என்பது பாகவத பாராயணமும் பாகவத க்ரந்தத்திற்கு செய்யும் பூஜையுமே ஆகும். ஸ்ரீமத் பாகவதத்திலிருந்து ஸ்லோகங்களை புத்தகத்தைப் பாராமலேயே சொல்லிக்கொண்டிருப்பார். ஸ்ரீ க்ருஷ்ண விக்ரஹத்தை எப்படி பூஜை செய்வார்களோ அப்படி ஸ்ரீமத் பாகவத புத்தகத்தை பூஜிப்பார்.


அவர் ஸ்ரீமத் பாகவதத்தை ஸ்வயம் ஸ்ரீஹரியாகவே **பா**வித்தார். எனவே, வெள்ளி கவசத்தில் ஸ்ரீமத் பாகவதத்தை வைத்து அதை நன்கு அலங்கரிக்கப்பட்ட ஸிம்மாஸனத்தில் எழுந்தருளப் பண்ணி வைத்திருப்பார். தினமும், ஸ்ரீமத் பாகவதத்திற்கு தளிகை ஸமர்ப்பித்துவிட்டு, அந்த ப்ரஸாதத்தைத்தான் அவர் உண்பார். கோடைக்காலத்தில் இடைவிடாது பாகவதத்திற்கு ஸாமரம் வீசுவார். குளிர்காலத்தில் பாகவதத்தை பஞ்சுமெத்தையில் சுற்றிவைப்பார். மழைக்காலத்தில் அதை அழகிய ஊஞ்சலில் வைத்து நளினமாக ஆட்டிக்கொண்டு இருப்பார்.

அவததாஸை தரிசிக்க யார் எப்பொழுது சென்றாலும் அவர் பாகவதம் பாராயணம் செய்துகொண்டோ அல்லது பாகவதம் பற்றி

பேசிக்கொண்டோ இருப்பதையே பார்ப்பார்கள். ஸ்ரீமத்பாகவதத்தைப் பற்றி மட்டும் தான் அவர் பேசுவார். இதைத்தவிர வேறு எதையும் பேசமாட்டார்; மற்றவரையும் பேசவிடவும் மாட்டார்.

ஒரு இளைஞன், சித்த புருஷரது உச்சிஷ்ட உணவை சாப்பிட்டால் ஸ்ரீராதாமாதவ தர்சனம் கிட்டும் என கேள்விப்பட்டு, அலஹாபாத்திலிருந்து ஸ்ரீப்ருந்தாவனம் வந்தான். அவனிடம் யாரோ அவததாஸைப் பற்றிக் கூறவே, அவன் அவததாஸின் ஆஶ்ரமத்தை அடைந்தான். அச்சமயம் அவததாஸ் ப்ரஸாதம் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். இந்த இளைஞன் யார் தடுத்தும் கேளாமல், நேரே அவததாஸிடம் சென்று கைகளைக் கூப்பிக்கொண்டு தனக்கும் சிறிது ப்ரஸாதம் அவரது கைகளால் தருமாறு வேண்டிக்கொண்டான். அவததாஸ் உண்ணும்பொழுது ஸ்ரீக்ருஷ்ணானுபவத்தில் இருந்ததால், அவர் செவிகளில் எதுவும் விழவில்லை. அந்த இளைஞன், அவததாஸ் தனது கோரிக்கையை ஏற்கவில்லை என நினைத்து தானாகவே தன் கைகளை நீட்டி அவரது இலையிலிருந்து உணவை எடுத்துக்கொண்டு விட்டான். ஆனால் அவன் அதை உண்ண முயன்றபோது, அவததாஸ் சட்டென்று அவனது கையைப் பிடித்து தடுத்து அவன் கையிலிருந்த ப்ரஸாதத்தைப் பிடுங்கி எடுத்து, தானே அவனது வாயில் ஊட்டினார்.

ப்ரஸாதத்தை வாயில் இட்ட உடன், அந்த இளைஞன் மூர்ச்சையாகி விழுந்தான். மாலை வரை அவன் மூர்ச்சை தெளியவில்லை. மாலையில் பாகவத பாராயணம் முடிந்த பிறகு அவததாஸ், அங்கு வந்திருந்த ஸாதுக்களை கீர்த்தனம் செய்யச் சொன்னார். நாமஸங்கீர்த்தனம் ஆரம்பித்ததோ இல்லையோ, மூர்ச்சையாகி விழுந்த இளைஞன் விழித்துக்கொண்டு சுற்றுமுற்றும் ஆச்சர்யத்துடன் பார்த்தான். உடனே திடீரென்று அவததாஸ்பாபாவின் சரணங்களைப் பற்றிக்கொண்டு, ''என்னை மன்னியுங்கள் மஹராஜ். உங்களருகில் நான் மிகப்பெரிய அபசாரம் செய்து விட்டேன். என் காலம் முழுவதும் தங்கள் சரணத்தில் வீழ்ந்து கிடந்து உங்களுக்கே சேவை செய்கிறேன். இனி, இந்த இடத்தைவிட்டு நான் எங்கும் செல்ல மாட்டேன். தயவு செய்து கருணையுடன் என்னை ஏற்றுக்கொள்ளுங்கள் குருதேவா'' என கெஞ்சி அழுதான்.



அவததாஸ் பாபா அவனை மன்னித்தது மட்டுமல்லாமல், அவனுக்கு தீக்ஷையும் அளித்து அவனைப் பற்றிய முழு பொறுப்பையும் தானே ஏற்றார். வந்திருந்த ஸாதுக்களில் ஒருவர் அவனை, ''நீ பாபாவைப் (அவததாஸ்) பற்றி என்ன தெரிந்து கொண்டாய் எனக்கேட்டார். அதற்கு அவன், ''பாபா அருந்திய உணவில் சிறிது பாகம் என் வாயில் போடப்பட்டதும், நான் ஏதோ ஒரு உலகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கே நான் வ்ரஜேந்திர நந்தனான ஸ்ரீ கிருஷ்ணனின் போஜன லீலையை தர்சித்தேன். அவததாஸ் பாபாவும் ஸ்ரீக்ருஷ்ணனும் தனது ஸகாக்கள் நடுவில் உட்கார்ந்திருந்தனர். மிகவும் குஷியாகவும், ஆனந்தமாகவும் க்ருஷ்ணனும் பாபாவும் தங்கள் கையால் மற்றவர் வாயில் ஒருவருக்கொருவர் உணவை ஊட்டிக்கொண்டு விளையாடி மகிழ்ந்து கொண்டிருந்தனர். இந்தக் காட்சியைத்தான் நான் கண்டு களித்தேன்'' என்றான்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

# வாரமும் குணமும்

இந்த இதழில், ஒரு வாரத்தில் உள்ள ஏழு கிழமைகளில் அந்தந்த கிழமைகளில் பிறந்தவர்களின் குணாதிசயங்களை நாம் சிறிது பார்ப்போம்.

### ரவி வாரத்தில் பிறந்தவர்கள்

இந்தக் கிழமையில் பிறந்தவர்கள், சூரனாகவும், சொல்ப கேசம் உடையவர்களாகவும் (அனேகமாக வழுக்கைத் தலை உடையவர்களாகவும்) யுத்தங்களில் ஜெயம் அடைபவர்களாகவும், கருப்பு, சிவப்பு கலந்த மாநிறம் உடையவராகவும், பித்த ஸம்பந்தமான வியாதி உடையவர்களாகவும், அதிக கோபம் உடையவர்களாகவும், எப்பொழுதும் உற்சாகம் உடையவர்களாகவும், நல்ல தேஜஸ் உடையவர்களாகவும், தானம் செய்பவர்களாகவும், மனவலிமை உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

### ஸோம வாரத்தில் பிறந்தவர்கள்

திங்கட்கிழமை காலையில் பிறந்த மனிதன் ப்ரியமாக பேசுகின்றவனாகவும், ஒரு காரியத்தை எப்படி செய்து முடிக்க வேண்டும் என்ற வரைமுறைகளை அறிந்தவனாகவும், அரசு உத்தியோகத்தில் வேலை பார்ப்பவராகவும், சுகம், துக்கம் இவைகளில் ஸமமான புத்தி உடையவர்களாகவும் இருப்பார்கள்.

### மங்கள வாரத்தில் பிறந்தவர்கள்

செவ்வாய் கிழமையில் பிறந்தவர்கள், வக்கிரமாக பேசுகின்றவர்களாகவும், பிறரிடம் சண்டை இடுவதில் ப்ரீதி உடையவர்களாகவும், அரசாங்கத்தில் ஆலோசனை சொல்லக்கூடிய வேலைகளில் இருப்பவர்களாகவும், விவசாய ஸம்பந்தப்பட்ட தொழிலில் ஈடுபடுபவர்களாகவும், ஹ்ருதயத்தில் ஶாந்தம் உடையவர்களாக இருந்தாலும் நடை, உடை பாவனைகளில் கொடூரமான ஸ்வபாவம் உடையவர்களாகவும் காணப்படுவார்கள்.

### புதவாரத்தில் பிறந்தவர்கள்

புதன் கிழமை பிறந்த மனிதன் நல்ல அழகுடனும், ம்ருதுவாக பேசுகின்றவனாகவும், செல்வம் உடையவனாகவும், கலைகளை

ரசிக்கக் கூடியவனாகவும், பல கலைகளை அறிந்தவனாகவும், வியாபாரம் செய்வதில் ஸமர்த்தனாகவும், சிறந்த புத்தி, ஸமர்த்தியம் உடையவனாகவும், உயர்ந்த குணங்களை கொண்டவனாகவும் இருப்பான்.

**குருவாரத்தில் பிறந்தவர்கள்**

வியாழக்கிழமையில் பிறந்த மனிதன், வித்யைகளை கசடற கற்றவனாகவும், செல்வம் உடையவனாகவும், நல்ல குணங்களுடன் கூடியவனாகவும், மனதிற்கு இன்பம் அளிக்கக் கூடியவனாகவும், அரசாங்கத்தில் இருந்து பல அனுகூலங்களை பெறுபவனாகவும், பிறருக்கு போதிப்பவனாகவும், பல ஜனங்களுக்கும் பிரியமானவனுமாக இருப்பான். மேலும் வருங்காலத்தில் நடக்க இருப்பதை முன்னே அறிந்தவனாகவும் இருப்பான்.

**சுக்ர வாரத்தில் பிறந்தவர்கள்**

வெள்ளிக்கிழமைகளில் பிறந்த மனிதன் நீல நீறம் அல்லது கறுத்த நிறம் உடையவனாகவும், அழகாகவும் இருப்பான். எப்பொழுதும் தூய்மையாக இருப்பதில் பிரியமாக இருப்பான். வெள்ளை ஆடைகளை அணிவதில் பிரியமுள்ளவனாக இருப்பான். சிறந்த அறிவுடையவனாகவும், நல்ல வழியில் செல்பவனாகவும் இருப்பான். எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்ற எண்ணம் இவர்களுக்கு மேலோங்கி இருக்கும். வாசனை திரவியம், வாசனை உடைய மலர்கள் இவைகளைத் தரித்துக்கொள்பவர்களாகவும் இருப்பார்கள்.

**சனிவாரத்தில் பிறந்தவர்கள்**

சனிக்கிழமைகளில் பிறந்தவன், இளமையிலேயே முதுமை அடைந்தவன் போல் காணப்படுவான். மெலிந்த தேகம் உடையவனாகவும் இருந்த போதிலும், வலிமை உடையவனாகவும் இருப்பான். இவனுடைய காதுகள் பருத்து இருக்கும். கெட்ட நடத்தை உள்ளவனாக இருப்பான். தூக்கம், நாளை என்று தள்ளிப் போடுதல், மெதுவாக செய்தல், ஈடுபாடு இல்லாமல் செய்தல் போன்ற தமோ குணங்கள் உடையவனாகவும் இருப்பான்.

இவைகளில் சிலர் செல்வம் உடையவர்களாக இருந்த போதிலும், அந்த செல்வம் ஏதோ ஒரு குருட்டு அதிர்ஷ்டத்தில் இவர்களை வந்து அடைந்ததாக இருக்கும்.

# பெரியாரைப் பிழையாமை

ஸாது மிரண்டால் காடு கொள்ளாது என்பது தமிழ் வசனம். ஸ்ரீமத் ராமாயணத்தில், ராமருடைய குண நலன்களை வர்ணித்து வரும் வால்மீகி மஹரிஷி, ராமர் பொறுமையில், பூமிபிராட்டிக்கு ஸமமானவர் என்றும், அதே ஸமயத்தில் அவருக்கு கோபம் வந்தால் ப்ரளய காலத்தில் உண்டாகும் அக்னி போல் கோபம் ஏற்படும் என்றும் கூறுகிறார். மஹாபாரதத்திலும், தர்மபுத்திராதிகள் எவ்வளவோ பொறுமையுடன் இருந்தனர். அதன் விளைவாக கௌரவப் படை பேரழிவை சந்தித்தது. தன்னை கொடும் சொற்களால் சீண்டிய சிசுபாலனையும் பொறுத்துக்கொண்ட கண்ணன், முடிவில் சிசுபாலனை வதமே செய்கின்றான். எத்தனையோ மஹான்களின் சரித்திரங்களிலும், வாழ்க்கையில் சொல்லொணா துயர்களை அவர்கள் அனுபவித்து இருப்பதை, அவர்களின் சரித்திரங்களின் வாயிலாக நாம் காண்கிறோம்.

ஒரு உண்மையான யதியின் (ஸன்யாசியின்) கோபத்திற்கு ஆளான ஒருவன், எத்தனை ஜன்மம் எடுத்தாலும் அவனை அது தொடர்ந்து வாட்டும். அவன் நற்கதி அடைய வழியே இல்லை என்று பெரியோர்கள் கூறுகின்றனர். ஆகவே மஹான்கள், வேதம் அறிந்தவர்கள், பாகவதோத்தமர்கள், ஸாதுக்கள், மாதா, பிதாக்கள், குருநாதர், பசு, கங்கை, அசுவத்த வ்ருக்ஷம், துளசி செடி ஆகியோரிடம் நாம் மரியாதையுடனும், பயபக்தியுடனும் நடந்துகொள்ள வேண்டும். ஒருபோதும் அவர்கள் மனம் வருந்தும்படி நடந்துகொள்ளலாகாது.

ஸாதுக்களின் பொறுமை என்பது இயலாமை அன்று. பரம கருணையினாலேயே, அவர்கள், எல்லாருடைய அபசாரங்களையும் பொறுத்துக்கொள்கிறார்கள். எனினும், நாம் அவர்களுக்கு செய்யும் அபசாரம், அவர்களுடைய ஸங்கல்பம் இல்லாமலேயே, நமக்கு பலவித துன்பங்களை ஏற்படுத்தும் என்பதை நாம் மறுக்கலாகாது.

ஸாதுக்களிடம் பிழை செய்யலாகாது என்பதைப் பற்றி தெய்வப் புலவரான திருவள்ளுவர் என்ன சொல்கிறார் என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

(அதிகாரம் - 90)

***ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்***
***போற்றலுள் எல்லாம் தலை.*** 1

தன்னுடைய ஸங்கல்ப மாத்திரத்திலேயே, தாம் என்ன காரியம் செய்யவேண்டும் என்று நினைக்கின்றார்களோ, அதைச் செய்து முடிக்க வல்ல பெரியோர்கள் உலகில் உண்டு. ஒருவன் தனக்கு எந்த ஆபத்தும் வரக்கூடாது என்று காத்துக்கொள்ள விரும்பினால், தனக்கு முதல் பெரிய பாதுகாப்பாக, இத்தகைய பெரியவர்களிடம் பிழை செய்யாமல் இருப்பதே ஆகும் என்று தெய்வப் புலவர் கூறுகிறார்.

***பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்***
***பேரா இடும்பைத் தரும்.*** 2

குணங்களாலும், தவத்தாலும், தர்மத்தாலும் உயர்ந்த பெரியோர்களை அலட்சியப்படுத்திவிட்டு, அவர்களுக்கு உரிய மதிப்பைத் தராமல் நாம் நடந்து கொண்டோமானால், அப்பெரியவர்களால் நமக்கு நீங்காத துன்பம் உண்டாகும் என்று இக்குறளில் கூறுகிறார். அதாவது அப்பெரியோர்களிடம் பிழை செய்யாமல் இருந்தால் மட்டும் போதாது. அத்தகையவர்களை நாம் மதித்தும், அத்தகையவர்களுக்கு உரிய மரியாதை கொடுத்தும் ஆக வேண்டும் என்று இக்குறளின் மூலம் வலியுறுத்துகிறார்.

***கெடல்வேண்டின் கேளாதுசெய்க அடல் வேண்டின்***
***ஆற்று பவர்கண் இழுக்கு.*** 3

ஒருவன் தான் அழிந்துபோக வேண்டும் என்று தீர்மானித்து விட்டானானால் அதற்கு அவன் பலவிதத்திலும் சிரமப்பட வேண்டும் என்று தேவையில்லை. தங்களுடைய ஸங்கல்ப மாத்திரத்தில், எதை வேண்டுமானாலும் அழித்துவிடக்கூடிய வல்லமை உடையவர்களான பெரியோர்களிடம் பிழை செய்தால்

போதுமே. அவன் எண்ணம் தானாக ஈடேறிவிடுமே என்று கூறுகிறார் தெய்வப் புலவரான திருவள்ளுவர்.

*கூற்றத்தை கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு*
*ஆற்றாதார் இன்னா செயல்.* 4

பலவிதத்திலும் மேன்மை பொருந்திய பெரியோர்களுக்கு எவ்விதத்திலும் மேன்மை இல்லாத ஒரு சிறியோன் செய்யும் தீங்கானது எப்படி ஆகும் எனில், ஒருவன் காலனைப் பார்த்து, தன்னை நோக்கி வா வா என்று அழைப்பதற்கு ஸமமாகும் என்று தெய்வப்புலவர் கூறுகிறார்.

*யாண்டுச்சென்று யாண்டும் உளராகார் வெந்துப்பின்*
*வேந்து செறப்பட் டவர்.*

தெய்வத்தின் பிரதிநிதியாகவும், தர்மத்தின் வழி நின்றும், ஸர்வ வல்லமை பொருந்தியவனாகவும், பல அதிகாரமும் கொண்டவனாகவும், உள்ள ஒரு மன்னனிடம் ஒரு சிறியோன் பகைத்துக்கொண்டு விட்டால் எங்கு ஓடியும், தப்பித்துக்கொள்ள முடியாது என்று கூறுகிறார் தெய்வப்புலவர்.

*எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்*
*பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.*

ஒருவன் தானாகவோ (அல்லது) எதிர்ச்சையாகவோ தீ விபத்தில் மாட்டிக்கொள்வது உண்டு. பெரும்பாலும் தீ விபத்தில் அகப்படுவோர்கள் உயிர் தப்புவது என்பது நடவாத காரியம். தெய்வப் புலவர் இங்கு என்ன கூறுகிறார் என்றால், ஒருக்கால் தீயினில் அகப்பட்டவன் கூட தப்பித்து விடலாம், ஆனால் பெரியோர்களிடம் பிழை செய்தவர்கள், ஒருகாலும் தப்பித்துவிட முடியாது என்கிறார்.

*வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்*
*நகைமாண்ட தக்கார் செறின்.* 7

பலவிதத்திலும் போற்றத்தக்க ஒரு பெரியவருடைய கோபத்திற்கு ஒருவன் ஆளாகிவிட்டானானால், அவனிடம் உள்ள பெரும் செல்வத்தினாலும், போற்றத்தக்க அவனுடைய வாழ்க்கையினாலும் ஒரு பயனும் இல்லை என்கிறார்.

*குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு*
***நின்றன்னார் மாய்வர் நிலத்து.*** 8

மலை போன்ற உயர்ந்த ஏற்றங்களை உடைய பெரியவர்களுக்கு ஒருகாலும் ஒருவன் பிழை செய்யலாகாது. சிலர், உலகத்தில் இவர்களும் மாண்டு போவார்களோ என்ற அளவில் பெருமையுடனும், ஆயுள் ஆரோக்கியத்தாலும், பல குழந்தைகளையும், பேரன்மார்களையும் பெற்றெடுத்து வாழ்வார்கள். அத்தகையோர்களும் பெரியோர்களுடைய கோபத்திற்கு ஆளானால் அவரும், அவருடைய குடியும் அழியும் என்கிறார் தெய்வப்புலவர்.

*ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து*
***வேந்தனும் வேந்து கெடும்.*** 9

அரசனே இறைவனின் ப்ரதிநிதியாவான். அரசனே தர்ம வழி செல்பவன் ஆவான். அரசனே நீதி தவறாதவனும் ஆவான். அரசனே தோள் வலிமை உடையவனும் ஆவான். அரசனே படைபலம் உள்ளவனும் ஆவான். அரசனே வானமாவிய அதிகாரங்கள் படைத்தவனும் ஆவான். இப்படிப்பட்ட அரசன் பல எதிரிகளாலும் வெல்ல முடியாதவனாகவும் இருக்கலாம். ஆனால் அத்தகைய அரசனும் ஒரு பெரியோரின் கோபத்திற்கு ஆளானானால் அவனும் தன் நிலை இழந்து கெடுவான் என்கிறார் வள்ளுவர்.

*இறந்தமைந்த சார்புடையார் ஆயினும் உய்யார்*
***சிறந்தமைந்த சீறார் செறின்.*** 10

ஒருவன் தன்னை பாதுகாத்துக்கொள்ள பலவிதமான உபாயங்களைச் செய்துகொண்டாலும், தன்னுடைய துணைக்கு எத்தனை பெரிய வல்லமையை சேர்த்துக்கொண்டாலும், ஒரு பெரியோரின் கோபத்திற்கு ஆளாகிவிட்டானானால், அனைத்தும் வீணாகிவிடும் என்கிறார் தெய்வப்புலவர்.

ஆகவே நாம், ஆன்றோர்களிடம் அவர்களுக்கு உரிய மரியாதையைக் கொடுத்து அவர்களை மதித்து, அவர்களின் உபதேசங்களைக் கேட்டு அதன்படி நடந்துகொள்ள முயற்சித்தால் அதன் மூலம் வாழ்க்கையில் பல மேன்மைகளை அடையலாம் என்பது திண்ணம்.

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷனைகளிலிருந்து -70


*சௌரியங்காட்டினை சழுக்கற்றதென்றே*
*சலியாதிருந்தாய் அருணாசலா* *(தொடர்ச்சி)*

ஒருவரின் அகந்தையை பகவான் எந்த விதத்திலாவது போக்குவான். அவனுக்குத் தெரியும். யாரை, எப்படி தடுத்து ஆட்கொண்டு செல்லவேண்டுமென்று. ஒரு பக்தர் தன்னை குருவிடமோ, பகவானிடமோ முழுவதும் ஶரணாகதி செய்த பிறகும் உலகில் துன்பம் அனுபவிக்கிறார். ஆனால், அப்படி கஷ்டப்படும் காலத்திலும்கூட அவர் குருபக்தியையோ, தெய்வபக்தியையோ விடவில்லை. பக்தி செய்தும் அவர் கஷ்டப்படுவதால், அவரை குருவோ, தெய்வமோ கைவிட்டதாகிவிடாது.

குருவுக்கும், தெய்வத்திற்கும் அவர் செய்யும் பக்தியும், அவர் படும் கஷ்டமும் தெரியாமலிருக்காது. இருந்தும் குருவோ, தெய்வமோ பக்தர் படும் கஷ்டத்தை பார்த்துக்கொண்டுதான் உள்ளனர். ஏனெனில், அத்தகைய துக்கங்களின் மூலம் பக்தரை மென்மேலும் பக்குவப்படுத்தி, தனது சரணாரவிந்தங்களில் சேர்த்துக் கொள்வதே தெய்வத்தின் நோக்கம்.

ஒரு அழுக்குத் துணியை வண்ணான், நன்றாக அடித்து தோய்க்கிறான். அப்படி அவன் தோய்த்தால்தான் துணி வெளுக்கும். அல்லாவிடில், அழுக்கு போகாது. வண்ணானிடமிருந்து மீண்டும் துணியை வாங்கி வந்தால், துணி வெண்மையாக உள்ளதே என்று ஆச்சரியப்படுகிறோம். உண்மையில் துணிக்கு வெண்மையை வண்ணான் கொடுக்கவில்லை. துணி வெண்மையாகத்தானிருந்தது. பின்னர் அழுக்காகிவிட்டது. மறுபடி அழுக்கை போக்கி வெண்மையாக்கினான் வண்ணான். வண்ணான் நன்றாகத் தோய்த்து, பிழிந்தால் எப்படி துணியிலிருந்து அழுக்கு போகிறதோ, அதுபோல், உலகில் பலவித சிரமங்களைக் கொடுத்து, பக்தனின் ஹ்ருதயத்திலிருக்கும் அழுக்கை எல்லாம் பகவான் போக்குவான்.

நாம் என்றும் ஆனந்த ஸ்வரூபமே. ஆத்மஸ்வரூபமே. அந்த ஆத்மஸ்வரூபம் எங்கே உள்ளது என்று தெரியாமலிருப்பதால்தான், உலகில் பல துக்கங்களை அனுபவிப்பதாக ஒரு ப்ரமை வருகிறது. வண்ணான் துணியின் அழுக்கை போக்குவது போல், பகவான் ப்ரமையை போக்குகிறான். ஆனால், யாரை எப்படி ஆட்கொள்வான் என்று சொல்வது இயலாது.



அதனால்தான், அநேக மஹாத்மாக்களின் சரித்திரங்களைப் படித்துப்பார்த்தால், ஒவ்வொருவரின் சரிதமும் மற்றவரிடமிருந்து மாறுபட்டு உள்ளது தெரிய வருகிறது. ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் சரிதம் ஒரு மாதிரி இருந்தால், பகவான் ரமண மஹரிஷிகளின் சரிதம் வேறு மாதிரி உள்ளது. பகவான் பல மஹாத்மாக்களை பலவிதமாய் தடுத்தாட்கொண்டு, அதன் மூலம், பல லீலைகளைப் புரிந்துள்ளான்.

இப்படி தடுத்தாட்கொள்ளும் குருநாதரோ, பகவானோ சிஷ்யனுக்கு உபதேசம் செய்வர். சிஷ்யன் அந்த உபதேசப்படி நடக்கவில்லை என்றால், அப்படி நடக்கும்படி செய்துவிடுவர். அதற்கு ஏற்றாற் போல் சூழ்நிலையையே மாற்றிவிடுவர்.

திருவலம் ஸ்வாமிகள் என்று ஒரு மஹாத்மா, ராணிப்பேட்டை அருகில் உள்ள சித்தூரில், திருவலம் என்னும் ஊரில் ஸமீபகாலத்தில் வாழ்ந்து வந்தார். அவர் ஜாதியில் வண்ணான். வேஷ்டியைப் பற்றி பேசியதால் அவர் ஞாபகம் வருகிறது. அவரை திருத்தணி முருகனே தடுத்தாட்கொண்டு, அவரை வாழ்க்கையிலிருந்து பிரித்துக் கொண்டு வந்தான். அவர் தியானத்தில் போகும் ஒவ்வொரு முறையும், முருகப்பெருமானே அவர் முன்வந்து, அவருக்கு பலவிதமான உபதேசங்களை செய்வான். அந்த உபதேசப்படி அவர் நடக்கவில்லை என்றால், அதன்படி அவர் நடக்கவேண்டிய ஸம்பவம், அவர் வாழ்க்கையில் நடப்பதை ஆச்சரியமாகப் பார்க்கலாம்.

முதல் உபதேசம், முருகன் அவருக்கு செய்தது, ''கூழ் குடித்தால் ஊழ் போகும்'' - என்பது. யார் இந்த நாக்கின் ருசியை அறுத்து, வெறும் கஞ்சியை மட்டும் சாப்பிட்டு வருகிறார்களோ, அவர்களுடைய கர்மாக்கள் எல்லாம் நாசமாகும் என்பது இதன் பொருளாகும்.

பிறகு, ''நீத்தாரைப்போல் திரி'' என்று முருகன் உபதேசித்தான். உலகில் பிராணன் இல்லாதவன் எப்படி சஞ்சரிப்பானோ, (அவனுக்கு உலகில் இருக்கும் வஸ்துக்களின் மேல் ராகத்வேஷமோ, பக்ஷபாதமோ இருக்காது) அதுபோல் நடந்து கொள்ள வேண்டுமென்று அறிவுரை கூறினான். மற்றொருமுறை ''பேசாதிருந்தும் பழகுக'' என்றான் முருகன். சும்மா இருப்பது என்றால், வாக்கினால் மௌனம் இல்லை. மனோ மௌனத்தை கடைப்பிடி என்று அர்த்தம்.

இப்படியே ஒரு முறை, முருகப்பெருமான் அவர் முன் வந்து ''அங்கிங்கு அலைந்து திரியாதே'' என்று கூறினான். அதாவது, இருக்கும் இடத்தை விட்டுவிட்டு, அவர் எங்கும் யாத்திரை செல்லக்கூடாது என்றான். அவர் அதைக் கேட்கவில்லை. யாத்திரை சென்ற வண்ணமாகவே இருந்தார். இரண்டு நாட்களில் அவருக்கு ஒரு ஸம்பவம் மூலம் கால் ஒடிந்து போய், அவர் எங்கும் வெளியில் செல்ல முடியாதபடி ஆகிவிட்டது. ஆக, உபதேசத்தில் சிஷ்யன் நிற்கவில்லை என்றால், உபதேசத்தில் நிற்கும்படி குரு (பகவான்) செய்கிறார் அல்லவா?

இதுபோல், அவர் தொடர்ந்து தியானம் செய்து, ஆத்மஸ்வரூபத்தை அடைய பலவிதமாக சிரமப்பட்டு வருகையில், முருகன் அவருக்கு முன் மறுபடி வந்து, ‘‘மூத்தோர் சொல்லும் முழுநெல்லிக்காயும் முன் துவக்கும், பின் இனிக்கும்’’ என்றான். தோப்பு நெல்லிக்காய் என்று ஒரு காய் உண்டு. அதை சாப்பிடும்போது துவர்ப்பாக இருக்கும். அதை சாப்பிட்டுவிட்டு, தண்ணீர் அருந்தினால் இனிப்பாக இருக்கும். அதுபோல், மஹாத்மாக்கள் சொல்லும் காரியம், செய்வதற்கு சிரமமாக இருக்கும். பண்ணிப் பார்த்தால், பலனோ, ஆனந்தமாக இருக்கும். முருகன் சொன்ன அந்த உபதேசத்தின் பொருள் இதுவே.

பின்னர், திருவலம் ஸ்வாமிகள் ஸாக்ஷாத் பரமேஶ்வரனை நேரிலேயே தரிசனம் செய்தார். சிவகணங்களில் முதன்மை யானவர்கள் வந்து அவரை கைலாஸத்துக்கு அழைத்துப் போயினர். கைலாஸம் சென்ற பின்னும், அவருக்கு சாந்தி வரவில்லை. ஸகுணோபாஸனையினால், சாந்தி அடையாத அவரை முருகன் தேடி வந்து, ‘‘மனமே நீசன். நீசனை நீக்கினால் ஈசன்’’ என்று விளக்கினான். ஆத்ம ஸ்வரூபத்தை அடைய மனமே பெரிய தடை. மனம் அழிந்தால்தான் நிம்மதி கிட்டும் என்பது இதன் பொருள். இதுவே முருகன் அவருக்கு செய்த கடைசி உபதேசம். அவர் அதன்பின், பெரிய ஞானியானார்.

சழுக்கற்றதென்றே சலியாதிருந்தாய் - பகவான், இங்கு தனது அபார கிருபையை காண்பித்து, ஒரு ஜீவனிடம் உள்ள மலங்களை எல்லாம் போக்கி, அவன் சலியாதிருந்தான். ஜீவனை தடுத்து ஆட்கொள்ளும்போதும், துன்பங்களைக் கொடுத்து பரிபக்குவம் ஆக்கும்போதும், ஜீவன் சொரூபத்தை அடைந்த பிறகும் என்று ஜீவனின் பலவிதமான நிலைகளிலும் பகவான் ஒரே மாதிரி உள்ளான்.

ஆதலால், குருவையும், தெய்வத்தையும் அண்டிய பின்னர், வாழ்வில் பல சிரமங்கள் வந்தால், பகவானும், குருவும் கைவிட்டதாக அர்த்தமாகாது. ஜீவனின் பக்தியும் பலிக்கவில்லை என்றும் ஆகாது. அத்தகையவர்களை சேர்த்துக் கொள்ளவே, பகவானும், குருவும் மிகவும் ப்ரீதியாக உள்ளனர்.

(தொடரும்)

# மஹாபாரத கதைகள்

**— நளோபாக்யானம்** (தொடர்ச்சி)

நளனைத் தேடும் பொருட்டு கிளம்பிய ப்ராஹ்மணர்களிடம் தமயந்தியானவள், ''தூங்குகின்றவளும், பாதி ஆடையுடையவளுமான, மனைவியை காட்டில் தனியாக விட்டு வந்த உன்னை, உனது மனைவி மிகவும் எதிர்பார்த்திருக்கிறாள். உன்னைவிட்டு பிரிந்ததினால் எப்பொழுதும் அழுதவாறு இருக்கும் அவளுக்கு, நீ தயை செய்ய வேண்டும். நற்குலத்தில் பிறந்து, தர்மமறிந்து நடக்கும் நீர், எப்படி மனைவியை துக்கத்தில், தனியாக விட்டுச் செல்லும் தகாத காரியம் செய்யத் துணிந்தீர்'' என்று போகுமிடந்தோறும் சொல்லிவருமாறு வேண்டிக்கொண்டாள். மேலும், அப்படி கூறுவதைக் கேட்டு, எந்த மனிதனாவது பதில் சொல்வானாயின், அந்த மனிதனைப் பற்றிய விவரத்தையும், அவன் சொன்ன பதிலையும் தன்னிடம் வந்து சொல்லுமாறு தெரிவித்தாள். அவர்கள் அனைவரையும் ரகசியமாக இருக்கும்படியும், பீமராஜன் சொல்படி தாங்கள் வந்திருப்பதை யாருக்கும் தெரிவிக்காமல் இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டாள்.

வெகுகாலம் கழித்து, பர்ணாதன் என்னும் ப்ராஹ்மணன் திரும்பி தமயந்தியிடம் வந்து, ஒரு விவரத்தைச் சொல்லுவானாயினன். பர்ணாதன், ''நான் அயோத்தி நகரை அடைந்து, ருதுபர்ண ராஜனிடம் உள்ள ஜனக்கூட்டத்தில் பலமுறை நீ சொல்லியதை, சொன்னபோதும், ஒருவரும் யாதொரு பதிலும் சொல்லவில்லை. ஆனால் ஒரே ஒரு மனிதன் மட்டும் என்னை தனிமையில் சந்தித்து பேசினான். அவன் பெயர் பாகுகன். அவன் அரசனின் குதிரைலாயத்தில் வேலை செய்கிறான். விகார உருவத்துடன், குட்டையான கைகள் கொண்டவனாக இருக்கிறான். அவன் விரைந்தும், சுலபமாகவும், நன்றாகவும் உணவை சமைக்கும் வல்லமை கொண்டிருக்கிறான். ருதுபர்ணனுக்கு அவனே தேர்ப்பாகன். எனது குசலத்தைக் கேட்டு அவன் ஒருவன் மட்டுமே, பெருமூச்செறிந்து

கொண்டே, அழுதபடி, ''குலஸ்த்ரீகளான பதிவ்ரதைகளுக்கு காவல் அவசியமில்லை. அவர்களுக்கு பர்த்தாக்களே தெய்வமாதலின், பர்த்தா யாது செய்தாலும், அவர்கள் கோபிக்கமாட்டார்கள். உணவை விரும்பி, பறவைகளால் ஆடை கவரப்பட்டு, ராஜ்யத்தை இழந்து, சோபையற்று இருக்கும் அவனிடம், அவளுடைய பிரியம் மாறாதிருக்க வேண்டும்'' என்று சொன்னான். அவன் சொன்ன சொல், அனைத்தும் அவன் உள்ளத்திலிருந்து வந்ததாகவே எனக்குப்பட்டது. அவன் உருவம் விகாரமே அன்றி, நற்குணங்களுக்கு உறைவிடமாக இருக்கிறான். அவனுடைய பதிலைக் கேட்டு நான் இங்கு வந்தேன். நீ வேண்டியதை செய்'' என்று தமயந்தியிடம் பர்ணாதன் கூறினான்.

தமயந்தி அதைக்கேட்டு மகிழ்ச்சியும், சந்தோஷமும் அடைந்தாள். ஹனுமார் சீதையை அசோகவனத்தில் கண்டு, ராமர் வரப்போகிறார் என்ற செய்தியை தெரிவித்தவுடன், சீதைக்கு மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால், தன் நினைவால் ராமர் வருந்துகிறாரே என துக்கமும் பட்டாள். அதுபோல், நளன் வருந்துகிறானே என தமயந்தி வருந்தினாள். அவன் இருக்குமிடம் அறிந்ததால் மகிழ்ச்சியும் அடைந்தாள். பர்ணாதனுக்கு நல்ல ஸன்மானங்களைக் கொடுத்து அனுப்பினான் பீமராஜன். பின்னர் நன்கு ஆலோசித்து, தமயந்தி தனது பெற்றோரிடம்,

''ஸுதேவன் எனும் ப்ராஹ்மணனை மறுபடி அனுப்பி, அயோத்தியாதிபதி ருதுபர்ணனிடம், தமயந்தி இரண்டாவது ஸ்வயம்வரத்திற்காக நாளை தயாராகிறாள். பலதேசத்து ராஜகுமாரர்கள் அவளை விரும்பி விதர்ப்பதேசம் செல்கின்றனர். நீயும் கலந்து கொள்வாய் என்று சொல்லுமாறு சொல்லச் சொன்னாள். பர்ணாதன் அதுபோலவே அயோத்தி சென்று, ருதுபர்ணனிடம் நாளை காலை தமயந்தியின் ஸ்வயம்வரம் என்றான். ருதுபர்ணன் நளன் காணாதபடியால், தமயந்தி இப்படி செய்கிறாள் என்று எண்ணி, ஸ்வயம்வரம் செல்ல முடிவு செய்தான். நளனை அழைத்து, அதற்காக குதிரைகளை ஏற்பாடு செய்ய சொன்னான். நளன் அடைந்த கடைசி துக்கம் இதுவே. இதன்பின், நளன் சுகத்தையே கண்டான்.

- தொடரும்

Visit us at www.madhuramurali.org for

1. Detailed reports of major mission / satsang events with pictures viz. Utsavams, Samprokshanams, Thirthayatras, Bhagavatha Sapthaham.
2. Online Spiritual magazine "Madhura Murali" every month in English/Tamil.
3. Satsang news & updates on mission activities.
4. Sri Swamigal's lectures/essays
5. Articles on religion, Philosophy, lives of saints.
6. Downloadable free audio "Hare Rama......." Mahamantra chanting rendered in various raagas & more.

## OUR MISSION PUBLICATIONS

| | | | Cassette | CD |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனங்கள் 2 Volumes | | Rs.80/- | Rs. 100/- |
| 2. | அக்ஷரமணமாலை | Part - I | Rs. 400/- | Rs. 400/- |
| | | Part - II | Rs. 400/- | |
| | | Part - III | Rs. 280/- | |
| | | MP3 CD | Rs. 150/- | |
| 3. | உபதேச உந்தியார் | | Rs. 240/- | |
| 4. | திருப்பாவை | | Rs. 560/- | |
| 5. | ‘‘ஹரே ராம’’ நாம கீர்த்தனம் | | Rs. 40/- | Rs. 50/- |
| 6. | ஸ்ரீ ஸ்வாமிகளின் பொன்மொழிகள் | | பாகம் 1 | Rs. 5/- |
| 7. | ஸ்ரீ ஸ்வாமிகளின் அருளுரைகள் | | பாகம் 1 | Rs. 20/- |
| 8. | மதுரமுரளி | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| July '95 - Aug '96, | Sept '96 | - | June '97 | Rs. 100/- |
| July '97 - June '98, | July '98 | - | June '99 | each |
| July '99 - June '2000, | July '2000 | - | June '2001 | Volume |

## செய்திகள்

**மே 1-ந் தேதி சென்னை ப்ரேமிகபவனத்தில் காலையில்**

சென்னை ப்ரேமிகபவனத்தில் பெருமாளுக்கு சிறப்பு திருமஞ்சனம் நடைபெற்றது. மாலையில் ஸ்ரீ ஸ்வாமிகள், ஆதிசங்கரர் பற்றி உபன்யாஸம் செய்தார்கள்.

**மே 3-ந் தேதி — ஏகாதஸீ**

சென்னை ப்ரேமிக பவனத்தில் மாலையில் திவ்யநாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

**மே 6-ந் தேதி - ந்ருஸிம்ஹ ஜயந்தி**

சென்னை ப்ரேமிகபவனத்தில் பெருமாளுக்கு விசேஷ ஆராதனை நடைபெற்றது. பானகம், நீர்மோர் ப்ரஸாதம் விநியோகிக்கப்பட்டது.

**மே 7-ந் தேதி - சித்ரா பௌர்ணமி**

காலையில் பெருமாளுக்கு திருமஞ்சனம் நடைபெற்றது. ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்களுக்கு பாதபூஜை செய்யப்பட்டது.

**மே 11-ந் தேதி**

சென்னை அடையாறு ஸ்ரீமதி லக்ஷ்மி முரளீதரன் அவர்கள் க்ருஹத்தில் ஸ்ரீ ஸ்வகமிகள் முன்னிலையில் ராதா கல்யாணம் நடைபெற்றது.

**மே 12-ந் தேதி**

சென்னை உள்ளகரம் ஸ்ரீமதி சந்திரா சேகர் அவர்கள் க்ருஹத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில் இரவு 7 மணி முதல் இரவு 10 மணி வரை திவ்யநாம கீர்த்தனம் நடைபெற்றது.

**மே 12, 13-ந் தேதிகள்**

சென்னை பம்மல் மதுரமுரளிபவனத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில் ராதா கல்யாணம் நடைபெற்றது.

**மே 19-ந் தேதி — ஏகாதஸீ**

சென்னை ப்ரேமிகபவனத்தில் காலையில் மாதுரி ஸகி ஸமேத ப்ரேமிக வரதனுக்கு திருமஞ்சனம் நடைபெற்றது. இரவு விசேஷ திவ்ய நாமஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

**மே 20-ந் தேதி**

சென்னை ஆலப்பாக்கம் மதுரமுரளிபவனத்தில் இரவு 6 மணியளவில் ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில் திவ்யநாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

**மே 27-ந் தேதி**

ரவணஸமுத்ரம் அருள்மிகு சொக்கலிங்க ஸ்வாமி, அருள்மிகு மீனாக்ஷியம்பிகா திருக்கோவில் மஹாகும்பாபிஷேகம் காலை 6½ மணியளவில் ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில் நடைபெற்றது.

**மங்களானி பவந்து**